## முதலமைச்சர் கோப்பை: போட்டியில் வென்ற மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த

# விளையாட்டு வீரர்கள் - வீராங்கனைகளுக்கு கோப்பைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, அக்.17–**

**முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் – 2025 நிறைவு விழாவில் முதல் மூன்று இடங்களை பெற்ற சென்னை, செங்கல்பட்டு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு கோப்பைகள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி வாழ்த்தினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.10.2025 அன்று சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2025 நிறைவு விழாவில், முதலிடத்தை பெற்ற சென்னை மாவட்டம், இரண்டாம் இடத்தை பெற்ற செங்கல்பட்டு மாவட்டம், மூன்றாம் இடத்தை பெற்ற கோயம்புத்தூர் மாவட்டம் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு கோப்பைகளை வழங்கி வாழ்த்தினார்.

**முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்-2025**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 7.10.2025 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் 2025-ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்- 2025 நடத்திட மொத்தம் 83.37 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 37 கோடி ரூபாய் பரிசுத் தொகையுடன் நடைபெற்ற மிகப்பெரிய விளையாட்டு போட்டியாகும். இது, தமிழ்நாடு அரசு விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் மேற்கொண்டுள்ள மற்றொரு முக்கியமான மைல்கல் ஆகும். இதன் மூலம் அனைத்து தரப்பினரையும் விளையாட்டில் ஈடுபடச் செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், திறமையான வீரர்களை பாராட்டி அவர்களை ஊக்குவிக்கும் வகையில் உரிய அங்கீகாரம் மற்றும் பரிசுகளை வழங்குவது இதன் முக்கிய நோக்கமாகும்.

இவ்வரசு பொறுப்பேற்றது முதல், விளையாட்டு வீரர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கும் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்திடும் வகையில் அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளை யாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

முதலமைச்சர் கோப்பை போட்டிகள் வெறும் போட்டிகளாக அல்லாமல், வயது, பகுதி, போன்ற எல்லைகளைத் தாண்டிய திறமை மற்றும் உறுதியின் கொண்டாட்டமாக மாறியுள்ளன. இப்போட்டிகளில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் அரசு ஊழியர்கள் என அனைவருக்கும் பங்கேற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்த 83.37 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கடந்த ஆண்டின் வெற்றிகரமான அனுபவம், இவ்வாண்டு போட்டியை மேலும் பெரிய அளவில் நடத்த வழிவகுத்துள்ளது. 2025-ஆம் ஆண்டின் மாவட்ட மற்றும் மண்டல அளவிலான போட்டிகள் செப்டம்பர் 12, 2025 அன்று நிறைவடைந்து, மாநில அளவிலான போட்டிகள் அக்டோபர் 2 முதல் 14, 2025 வரை நடைபெற்றன.

2025-ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மொத்தம் 16,28,338 பேர் ஆன்லைனில் பதிவு செய்துள்ளனர். இவர்கள் பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் அரசு ஊழியர்கள் ஆகிய ஐந்து பிரிவினராவர். மொத்தம் 38 தனிநபர் மற்றும் குழு விளையாட்டு போட்டிகளில் அவர்கள் பங்கேற்றனர். இதில் 32,000 க்கும் மேற்பட்ட வீரர்கள் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்றனர். இப்போட்டிகள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம், திண்டுக்கல், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, வேலூர், திருவண்ணாமலை, சேலம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய 13 நகரங்களில் நடைபெற்றன.

மாநில அளவிலான போட்டிகளில் பரிசுத் தொகை, தனிநபர் பிரிவில், முதலிடம் பெறுபவர்களுக்கு ரூ.1,00,000/-, இரண்டாம் இடம் பெறுபவர்களுக்கு ரூ.75,000/-, மூன்றாம் இடம் பெறுபவர்களுக்கு ரூ.50,000/-மும், குழு விளையாட்டுகளில், முதலிடத்தில் வெற்றிபெற்ற அணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூ. 75,000/-, இரண்டாம் இடத்திற்குரிய அணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூ. 50,000/-, மூன்றாம் இடத்திற்குரிய அணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூ. 25,000/-மும், இதனுடன் கல்வி உதவித் தொகைகள், அங்கீகாரம் மற்றும் வேலைவாய்ப்புகள் போன்ற பல நன்மைகளும் வழங்கப்படுகின்றன.

இவ்வாண்டின் முக்கிய அம்சமாக, e-Sports முதன்முறையாக போட்டி நிகழ்வாகவும், மற்ற போட்டிகளுக்கு நிகராக பரிசுத்தொகையுடன் நடத்தப்பட்டது. மேலும், பாரம்பரிய விளையாட்டுகளுக்கு அளிக்கப்படும் ஆதரவையும் உறுதிப்படுத்தியது.

இதற்கு முன் இல்லாத அளவிலான பதிவு எண்ணிக்கைகள், பெரும் பரிசுத் தொகை மற்றும் e-Sports போன்ற புதுமையான பிரிவுகளின் அறிமுகத்துடன், முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள்- 2025, தமிழ்நாட்டில் இதுவரை நடத்தப்பட்ட மிகப்பெரிய மற்றும் அனைவர் பங்கேற்பும் உறுதி செய்யப்பட்ட விளையாட்டு நிகழ்வாக அமைந்தது. இது தமிழ்நாடு அரசின் விளையாட்டு வளர்ச்சிக்கான பார்வையையும், சமூக பங்கேற்பையும் ஊக்குவிக்கும் உறுதியையும் பிரதிபலிக்கிறது.

மேலும், Games Management System (GMS) மூலம் முதலமைச்சர் கோப்பை தொடர்பான அனைத்து தகவல்களும் - பதக்க நிலை, வெற்றியாளர்கள் பட்டியல், மதிப்பெண்கள், வீரர் விவரங்கள் உள்ளிட்ட அனைத்தும் - அதிகாரப்பூர்வ இணையதளம் www.tncmtrophy.sdat.in

மூலம் துல்லியமாகப் பதிவுசெய்யப்பட்டு, பொதுமக்களுக்கு வெளிப்படைத் தன்மையுடன் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் முதன்முறையாக ஒரு WhatsApp Chatbot அறிமுகப்படுத்தப்பட்டு, இதன்மூலம் பயனர்கள் போட்டி மதிப்பெண்கள், முடிவுகள் மற்றும் நிகழ்வு புதுப்பிப்புகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளலாம். இந்திய அளவில் முதல் முறையாக, இத்தகைய டிஜிட்டல் வசதிகள் அடிப்படை நிலை விளையாட்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த நவீன முயற்சியின் மூலம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT) முழுமையான நிகழ்வு மின்மயப்படுத்தலில் (Digitization) முன்னோடியாக திகழ்கிறது. இதன்மூலம் விளையாட்டு வீரர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் எளிமையான அணுகல், வெளிப்படைத்தன்மை மற்றும் நேரடி தொடர்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களை வென்ற மாவட்டங்களைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு கோப்பைகளை வழங்குதல்

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் - 2025-ல் பள்ளி, கல்லூரி, மாற்றுத்திறனாளி, அரசு பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் என்ற ஐந்து பிரிவுகளின் கீழ் தடகளம், டென்னிஸ், கூடைப்பந்து, கால்பந்து, பளு தூக்குதல் உள்ளிட்ட 37 வகை விளையாட்டு பிரிவுகளில் மொத்தம் 196 போட்டிகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இதில் 109 தங்கம், 90 வெள்ளி மற்றும் 82 வெண்கலம் என மொத்தம் 281 பதக்கங்களுடன் சென்னை மாவட்டம் முதலிடத்தையும், 36 தங்கம், 22 வெள்ளி மற்றும் 30 வெண்கலம் என 88 பதக்கங்களுடன் செங்கல்பட்டு மாவட்டம் இரண்டாம் இடத்தையும், 33 தங்கம், 27 வெள்ளி மற்றும் 35 வெண்கலம் என 95 பதக்கங்களுடன் கோயம்புத்தூர் மாவட்டம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது. முதல் மூன்று இடங்களை பெற்ற மாவட்டங்களைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோப்பைகளை வழங்கி வாழ்த்தினார்.

**விளையாட்டு வீரர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்!**

தமிழ்நாட்டில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு சங்கங்கள் மற்றும் சம்மேளனங்கள் நடத்தும் மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் 25,000 விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு போட்டிகளின் போது ஏற்படும் விபத்துகளினால் உண்டாகும் உடற்காயங்கள் மற்றும் உயிரிழப்பினை ஈடுசெய்து உதவிடும் வகையில் விளையாட்டு வீரர்களுக்கு 5 லட்சம் ரூபாய்க்கான காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், பீச்வாலிபால்வீராங்கனைகள் செல்வி எஸ்.பவித்ரா, செல்வி கே.தீபிகா மற்றும் பாரா டெபிள் டென்னிஸ் வீராங்கனை செல்வி ஆர்.தீபிகா ராணி ஆகியோருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவக் காப்பீட்டு ஆணைகளை வழங்கினார்.

**தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையிலிருந்து நிதியுதவி**

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையிலிருந்து நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்லும் திறன் கொண்ட விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி வழங்கிடும் வகையில், டிராக் சைக்கிள் வீரர் பி.பிரதீப் அவர்களுக்கு 3.50 இலட்சம் ரூபாய்க்கான டிராக் சைக்கிள், கேரம் விளையாட்டு போட்டியில் பங்கேற்பதற்காக வீராங்கனை செல்வி. எம்.காசிமா, வீரர் அப்துல் ஆசிப் ஆகியோருக்கு தலா 1.5 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள், மாற்றுத்திறனாளி தடகள விளையாட்டு வீரர் கே. முத்துராஜா, வீராங்கனைகள் செல்வி டி.சசிகலா, செல்வி கீர்த்திகா ஆகியோருக்கு தலா 1.65 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, “தமிழுக்கு வணக்கம்” பாடல் மற்றும் நடன நிகழ்ச்சி, முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் 2025 குறித்த காணொலி மற்றும் முதலமைச்சர் கோப்பை பாடல் இசை நிகழ்ச்சி ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். இதில் முதலமைச்சர் கோப்பை பாடல் இசை நிகழ்ச்சியில் வயது முதிர்ந்தவர்களும் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், இ.பரந்தாமன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சினேகா, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், நீச்சல் வீரர் பெனடிக்டன் ரோகித், சதுரங்க சாம்பியன் ஷர்வானிகா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## பெரம்பலூர், குன்னம் சட்டமன்ற தொகுதி

# பாகமுகவர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் கமிட்டி ஆலோசனைக் கூட்டம்! ஆ.இராசா எம்.பி. சிறப்புரை!

### வீ.ஜெகதீசன் - பா.துரைசாமி - தங்க.சித்தார்த் - ஏ.கே.அருண் - குன்னம் சி.இராஜேந்திரன் பங்கேற்பு!

*பெரம்பலூர்,அக்,17*

பெரம்பலூர்,குன்னம் சட்டமன்ற தொகுதி பாக முகவர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் கமிட்டி ஆலோசனைக் கூட்டம், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. 2026 சட்டமன்ற தேர்தலில் பணியாற்றும் வகையில், 10 வாக்குச்சாவடிகளை கண்காணிக்கும் நிர்வாகிகள் கமிட்டி அமைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இன்று நடைபெற்ற கமிட்டி ஆலோசனைக் கூட்டத்தில், கழக துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி.கலந்து கொண்டு 2026 சட்டமன்ற தேர்தலில் பெரம்பலூர், குன்னம் ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதிகளில் தி.மு.க. வெற்றி பெற வேண்டும் என்று கூறி அதற்கான ஆலோசனைகள் வழங்கினார்.

இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி, தொகுதி பார்வையாளர்கள் தங்க. சித்தார்த், ஏ.கே.அருண், குன்னம் சி.இராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், பட்டுச் செல்வி ராஜேந்திரன், ராமச்சந்திரன், ஆர்.முருகேசன், மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத், நூருல்ஹிதா இஸ்மாயில், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,

ஒன்றிய கழக செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.இராஜ்குமார், செ.நல்லதம்பி, தி. மதியழகன்,சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், அழகு. நீலமேகம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், ஆர்.அருண், டி.ஆர்.சிவசங்கர், மா.பிரபாகரன்,

மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் காடூர்.கவியரசு, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், பேரூர் கழக செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர்,ஏ.எஸ். ஜாகிர்உசேன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்!

---

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ தலைமையில்

# நீலகிரி மாவட்ட தி.மு.க. பாகநிலை முகவர்கள் கூட்டம்!

### பரமேஷ்குமார், தென்றல் செல்வராஜ், திராவிடமணி முன்னிலை!

*நீலகிரி, அக். 17 -*

நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில், உதகை, குன்னூர் மற்றும் கூடலூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட பாக நிலை முகவர்கள் (BLA2) கூட்டம் உதகை ஒக்கலிகர் திருமண மண்டபத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ தலைமையில் நடைபெற்றது, மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார் அனைவரையும் வரவேற்றார்.

சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பரமேஷ்குமார், தென்றல் செல்வராஜ், திராவிடமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் திமுக சட்டத்துறை இணைச்செயலாளர் வழக்கறிஞர் தண்டபாணி கலந்துகொண்டு எதிர்வரும் 2026 தேர்தல் பணிகளில் பாக நிலை முகவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார்.

கூட்டத்தில், மாவட்ட அவை தலைவர் போஜன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிகுமார், தமிழ்செல்வன், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், திராவிடமணி, காசிலிங்கம், செந்தில் ரங்கராஜ், தம்பி இஸ்மாயில், சுனிதா நேரு, மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா, நகர செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, சேகரன், ரமேஷ், ஒன்றிய கழக செயலாளர்கள் பரமசிவன், லாரன்ஸ், நெல்லை கண்ணன், காமராஜ், தொரை, பிரேம்குமார், பீமன், சிவானந்தராஜா, ராஜா, சுஜேஷ், ஜெகதீசன், உத்தமன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, சதக்கத்துல்லா, லியாகத் அலி, வீரபத்திரன், பில்லன், செல்வம்,

மோகன்குமார், உதயதேவன், ராஜேந்திரன், அமிர்தலிங்கம், வாணீஸ்வரி, மகேஷ், காளிதாசன், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார், உதயகுமார், நடராஜன், சதீஸ்குமார், சுந்தர்ராஜ், காளிதாஸ், சஞ்சீவ்குமார், முத்து, ரமேஷ்குமார், சின்னவர், சுப்ரமணி, மார்டின், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சசிகுமார், சிவசுப்ர மணியம், ராஜா, எல்கில் ரவி, காந்தல் ரவி, ஆலன், விவேகானந்தன், ரஹமத்துல்லா, வெங்கடேஷ், செந்தில்நாதன், அன்வர்அப்துல்லா, சுரேஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாபு, நாகராஜ், பத்மநாபன், முரளிதரன் மற்றும் அனைத்து வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கலந்து கொண்டனர்.

---

## திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளர்கள்

# “கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர்” விருதுக்கு விண்ணப்பிக்கலாம்!

### செய்தி மக்கள் தொடர்புத்துறை அறிவிப்பு!

சென்னை, அக் 17–

”கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுக்கு 2024 மற்றும் 2025–ஆம் ஆண்டுகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இவ்விருதிற்குத் தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளர்கள் விண்ணப்பிக்கலாம்.

தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் ”கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது 2022–ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. ”கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுக்குத் தேர்வு செய்யப்படும் விருதாளருக்கு ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) பரிசுத் தொகையுடன், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும். விருதிற்கான தகுதிகள் பின்வருமாறு:

”நடிகர், நடிகையர், இயக்குநர், தயாரிப்பாளர், கதாசிரியர், வசனகர்த்தா, இசையமைப்பாளர், பாடலாசிரியர், பின்னணிப் பாடகர் மற்றும் பாடகி, ஒளிப்பதிவாளர், படத்தொகுப்பாளர், கலை இயக்குநர், ஒலிப்பதிவாளர், சண்டைப்பயிற்சியாளர், நடன ஆசிரியர், ஒப்பனைக் கலைஞர் மற்றும் தையற் கலைஞர் எனத் தமிழ்த் திரைப்பட உலகிற்கு மிகச்சிறந்த பங்களிப்பை ஆற்றிய வாழ்நாள் சாதனையாளர்கள் விண்ணப்பிக்கத் தகுதி வாய்ந்தவராகக் கருதப்படுவர்.

இவ்விருதிற்குரிய விண்ணப்பப் படிவத்தினை செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வலைதளத்தில் (www.dipr.tn.gov.in) இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை விரிவான விவரங்கள் மற்றும் அவற்றுக்குரிய ஆவணங்களுடன் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை/ உறுப்பினர் – செயலாளர், திரைப்படத் துறையினர் நலவாரியம் முதல் தளம், மாநிலச் செய்தி நிலையம், கலைவாணர் அரங்க வளாகம், வாலாஜா சாலை, சென்னை–600002 என்ற முகவரிக்கு 14.11.2025 அன்று மாலை 5.00 மணிக்குள் அனுப்பிட வேண்டுகிறோம்.



ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், கே.சண்முகபுரம் கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.10லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கலையரங்க கட்டிடத்தை,விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் திறந்து வைத்தார்.நிகழ்வில் ஒட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் காசி விஸ்வநாதன், அன்புராஜன் இம்மானுவேல் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

## தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணிச் செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணியின் விழுப்புரம் தெற்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டம்

தலைவர் - பெ. அருள்ஜோதி சாலை வீதி, சி. மெய்யூர், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணைத் தலைவர் - செ. செந்தில்குமார் 4/104, தெற்கு வீதி, தி. எடையார் மற்றும் அஞ்சல், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

அமைப்பாளர் - சே. சூர்யா 98, மாரியம்மன் கோவில் தெரு, தென்னமாதேவி, விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ர. சக்தி பழைய காலனி, விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். 2) மு. ரமேஷ் புது ஏரிக்கரை, விராட்டிக்குப்பம் பாதை, விழுப்புரம் மாவட்டம். 3) மு. குணா தி. எடையார் மெயின் ரோடு, தி. எடையார், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 4) சு. ராமச்சந்திரன் மாரியம்மன் கோவில் தெரு, வாக்கூர் காலனி, வாக்கூர் மற்றும் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். 5) ப. சபரி முத்து 211, பிள்ளையார் கோவில் தெரு, ராதாபுரம், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 15-10-2025.

**டி.செங்குட்டுவன்**
செயலாளர்
தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி

---

## விபத்தில் உடல் நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும்

# கோணலூர் முன்னாள் கிளைச் செயலாளர் தங்கமணிக்கு நிதியுதவி!

### மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

*திண்டிவனம், அக். 17-*

விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஓலக்கூர் மேற்கு ஒன்றியம் கோணலூர்முன்னாள் கிளைகழகச் செயலாளராக பணியாற்றியவர் தங்கமணி. இவர் சாலை விபத்தில் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று தற்போது வீட்டில் உள்ளார்.

இதுகுறித்து தகவல் அறிந்த விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தங்கமணியின் வீட்டிற்கு நேரில் சென்று தங்கமணியை நேரில் சந்தித்து உடல் நலம் குறித்து நலம் விசாரித்துவிழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ரூபாய் 10.000 நிதி உதவி வழங்கி ஆறுதல் தெரிவித்தார்.

நிர்வாகிகள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், செஞ்சி சிவா, சொக்கலிங்கம், ராஜாராமன், அண்ணாதுரை, உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம்,மீனாட்சிபுரம் ஊராட்சியில் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.5.92லட்சம் மதிப்பீட்டிலும், மீனாட்சிபுரம் ஊராட்சி விட்டிலாபுரம் கிராமத்தில் ரூ.6.55 லட்சம் மதிப்பீட்டிலும் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி.மார்க்கண்டேயன் துவக்கி வைத்தார். காசி விஸ்வநாதன், அன்புராஜன், இம்மானுவேல் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.